1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்கள் கட்சியாக இருக்கட்டும், எனக்கு அவர்கள் உறுப்பினர்; இந்த அவையினுடைய உறுப்பினர். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: கட்சியிடம் ஒரு மனுக்கொடுத்து இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கலாம்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். எனக்கு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காகக் கொடுக்கிறபோது, அதற்கு நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் கட்சியில் அதற்கு என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியில் என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர், அவருடைய உரிமை, இந்த அவையில் அவர் பணியாற்றியமைக்காகப் பாதிக்கப்படுகிறபோது, நான் நடவடிக்கை எடுக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அதை நான் இன்றைக்குச் செய்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

6. கவன ஈர்ப்பு

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் சரிவர இயங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத். (குறுக்கீடுகள்)

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள 'சி.டி.ஸ்கேன்' சரிவர இயங்காதது குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வ்ாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்).

அறிக்கை

"மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி.ஸ்கேன் கடந்த 11-3-1994 முதல் 14-3-1994 வரை சப்ளை செய்த நிறுவனத்தாரின்

சீராக்கத்திற்கு (Servicing) உட்பட்டிருந்தபடியால், மேற்கண்ட காலத்தில் அக்கருவி இயங்காமல் இருந்தது. மீண்டும் 15-3-1994 முதல் இயங்கிக் கொண்டு வருகிறது.

5. உரிமைப் பிரச்சினை-தொடர்ச்சி

11-4-1994 ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை--தொடர்ச்சி.

திரு. பி.வி. இராஜேந்திரன்: நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன்,. 226. (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: Is it extraordinary?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ட்ராஆர்டினரி தான் இது. ஓர் உறுப்பினருடைய பெண்மையைப் பாதிக்கிற வகையில் நடக்கிற ஒன்று சாதாரணமா உங்களுக்கு? இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான்; இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான். இது என்ன அவ்வளவு சாதாரணமா உங்களுக்கு? பெண்மையைப் பாதிக்கிற பிரச்சினை. (குறுக்கீடுகள்) இல்லை, சாதாரணமானது என்றால், பாதிக்கப்பட்ட உறுப்பினரைப் பேச விட வேண்டும்; அதிலே கூட நான் விடவில்லை.

திரு. பி.வி. இராஜேந்திரன்: விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் என்று சொல்கிறேன்; அது உங்களைப் போன்றவர்களுக்குச் சரியாக இருக்கும். எனக்கு அது ஒவ்வாத காரியம். அதாவது பெண்மையைப் பாதிப்பது உங்களுக்கு அவ்வளவு சாதாரணக் காரியம் என்று இருக்கிறபோது, எனக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவை விதி 226-ல் 'Notwithstanding anything contained in these rules' என, அந்த ரூல்ஸ் இருந்தாலும்கூட, suo motu, Speaker